C

# முதல் இடைப்பருவத் தேர்வு - 2022
## பன்னிரெண்டாம் வகுப்பு
## வரலாறு

பதிவு எண்: [ ][ ][ ][ ][ ][ ]

நேரம்: 1. 30 மணி மதிப்பெண்கள்: 50

பகுதி - I

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 10×1=10

1. இந்தியாவின் ஆங்கிலக் கல்வி எந்த ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது.
அ) 1825 ஆ) 1835 இ) 1845 ஈ) 1855

2. இந்திய தேசிய காங்கிரஸை நிறுவியவர்
அ) சுபாஷ் சந்திரபோஸ் ஆ) காந்தியடிகள் இ) A.O. ஹியூம்
ஈ) பாலகங்காதர திலகர்

3. பின்வருவனவற்றுள் எந்த ஒன்று சரியாகப் பொருந்தியுள்ளது.
அ) பங்கிம் சந்திர சாட்டர்ஜி - ஆனந்த மடம்
ஆ) G. சுப்பிரமணியம் - விடிவெள்ளிக் கழகம்
இ) மிண்டோ பிரபு - பல்கலைக் கழகச் சட்டம் 1904
ஈ) தீவிர தேசிய வாதமையம் - சென்னை

4. பனாரஸ் இந்து பல்கலைக் கழகம் யாரால் நிறுவப்பட்டது?
அ) மகாத்மா காந்தியடிகள் ஆ) மதன் மோகன் மாளவியா
இ) திலகர் ஈ) பி.பி. வாடியா

5. "Indina Unrest" என்ற புத்தகத்தின் ஆசிரியர்
அ) லாலா லஜபதிராய் ஆ) வேலண்டைன் சிரோல்
இ) திலகர் ஈ) அன்னிபெசன்ட்

6. காந்தியடிகளின் அரசியல் குரு யார்?
அ) திலகர் ஆ) கோகலே இ) W.C. பானர்ஜி ஈ) M.G. ரானடே

7. இந்தியாவின் மூவர்ணக் கொடி எப்போது ஏற்றப்பட்டது.
அ) டிசம்பர் 31, 1929 ஆ) மார்ச் 12, 1930
இ) ஜனவரி 26, 1930 ஈ) ஜனவரி 26, 1931

8. தென்னிந்தியாவில் தன்னாட்டு இயக்கம் யாரால் துவங்கப்பட்டது
அ) திலகர் ஆ) அன்னிபெசன்ட் இ) பி.பி. வாடியா ஈ) எச்.எஸ். ஆல்காட்

9. கான்பூர் சதி வழக்கில் கைது செய்யப்பட்டவர் யார்? கீழ்க்காணும் பெயர்களில் இருந்து தேர்வு செய்க.
அ) எம்.என்.ராய் ஆ) பகத்சிங் இ) எஸ்.ஏ. டாங்கே ஈ) ராம் பிரசாத் பிஸ்மில்

10. பின்வரும் கூற்றுகளிலிருந்து சரியானவற்றை தேர்வு செய்க.
i) அலிகார் இயக்கத்தை தோற்றுவித்த சர்சையது அகமது கான் தொடக்கத்தில் காங்கிரஸை ஆதரித்தார்.
ii) 1909 இல் தோற்றுவிக்கப்பட்ட பஞ்சாப் இந்து சபையானது. இந்து மத வகுப்பு வாத அரசியலுக்கு அடித்தளமிட்டது.
அ) கூற்று (i) மற்றும் (ii) சரி ஆ) கூற்று (i) சரி (ii) தவறு
இ) கூற்று (i) தவறு (ii) சரி ஈ) கூற்று (i) மற்றும் (iii) தவறு

Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி - II

குறிப்பு : ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்: 5×2=10

11. அவுரி கலகம் குறித்து குறிப்பு வரைக.
12. தேசியம் என்றால் என்ன?
13. தேசிய இயக்கத்தை ஒடுக்க காலனிய அரசு மேற்கொண்ட அடக்கு முறைகள் யாவை?
14. இந்திய சுதந்திரப் போராட்டத்தின் ஒரு அத்தியாயமாக காதர் இயக்கம் கருதப்படுவது ஏன்?
15. பூனா ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் யாது?
16. டாடா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் (Tisco) பற்றி குறிப்பு வரைக.
17. இந்தியா வந்த வேல்ஸ் இளவரசர் எவ்வாறு வரவேற்கப்பட்டார்?

## பகுதி - III

குறிப்பு : ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி. 5×3=15

18. மெக்காலேயின் "இந்தியக் கல்வி குறித்த குறிப்புகள்" ஆய்க.
19. வ.உ.சிதம்பரத்தின் சுதேசி இயக்க முயற்சிகள் குறித்து எழுதுக.
20. மகாதேவ் கோவிந்த் ரனடே சுதேசிக் கொள்கையினை எவ்வாறு விளக்குகிறார்?
21. கிலாஃபத் இயக்கம் துவங்குவதற்கான பின்னனி என்னவாக இருந்தது?
22. மலபார் மாப்பிள்ளை கிளர்ச்சியின் காரணங்கள் மற்றும் துயர விளைவுகளைப் பற்றி விவாதிக்கவும்.
23. ஜாலியன் வாலாபாக் படுகொலை குறித்து குறிப்பு எழுதுக.
24. தனித்தொகுதி முறையினைப் பற்றி எழுதுக.

## பகுதி - IV

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** **3×5=15**

25. **பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்றக் காரணமான சமூகப் பொருளாதாரக் காரணிகளை ஆய்க.**

**(அல்லது)**

**இந்திய தேசிய இயக்கத்தில் வ.உ.சிதம்பரத்தின் பங்கினைப் பற்றி எழுதுக.**

26. **தமிழ்நாட்டில் சுதேசி இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து எழுதுக.**

**(அல்லது)**

**லக்னோ ஒப்பந்தத்தின்** முக்கிய அம்சங்களை முன்னிலைப்படுத்துக.

27. **இந்திய விடுதலைப் போரில்** மகாத்மா காந்தியடிகளின் பங்கினை மதிப்பீடு **செய்க.**

**(அல்லது)**

1900 முதல் 1920 வரை நடைபெற்ற சுதேசி இயக்க செயல்பாடுகளை **காலக்கோடு** வரைந்து ஏதேனும் ஐந்து நிகழ்வுகளை ஆண்டுகளுடன் குறிப்பிடவும்.

----------

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com